முனைவர் சி. சங்கரி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி - சீர்காழி

# PART -1-TAMIL

## நான்காம் பருவம் - தாள் -IV

# பண்டைய இலக்கியம்

## Sub Code: 16LCT4

அலகு - 4

# நாலடியார்

- பதினெண் கீழ்க்கணக்கு நூல் தொகுப்பைச் சேர்ந்த ஒரு தமிழ் நீதி நூல்.
- இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது.
- இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கருதப்படுகிறது.
- இதனால் இது நாலடி நானூறு எனவும் பெயர் பெறும். 'வேளாண் வேதம்' என்ற பெயரும் உண்டு.
- புகழ் பெற்ற தமிழ் நீதி நூலான திருக்குறளுக்கு இணையாகப் பேசப்படும் சிறப்பைப் பெற்றுள்ளது.
- வாழ்க்கையின் எளிமையான பொருட்களை உவமைகளாகக் கையாண்டு நீதி புகட்டுவதில் நாலடியார் தனித்துவம் பெற்று விளங்குகிறது.
- இந்நூலினை ஆங்கிலத்தில் ஜி.யூ.போப் மொழி பெயர்த்துள்ளார்.

## “அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்”............

- பெறுதற்கு அறிய இம்மனித உடம்பை புண்ணியப் பயனால் பெற்றிருக்கிறோம்.
- அப்படிப் பெற்றதைக் கொண்டு சிறந்த புண்ணியத்தை மேலும் மிகுதியாகத் தேடிக் கொள்ள வேண்டும்.
- அப்புண்ணியம், கரும்பிலிருந்து உண்டான சாறுபோல், உயிருக்குப் பெரிதும் உதவும்.
- அக்கரும்பின் சக்கை போல் உடம்பு பயனற்றதாய், அழிந்து போகும்.

"கல்லாது  போகிய நாளும் பெரியவர்கண்"………

✓கற்க வேண்டிய நூல்களைக் கற்காமல் வீணாகக் கழிந்த நாளும், கேள்வியின் காரணமாகப் பெரியோரிடத்தில் செல்லாமல் கழிந்த நாளும், இயன்ற அளவு பொருளை இரப்பார்க்குக் கொடாது கழிந்த நாளும் பணப்புடையாரிடத்தில் உண்டாகாவாம்.

"கோட்டுப்பூப் போல மலர்ந்து பிற் கூம்பாது"...............

- கொம்பிலே பூக்கும் பூக்கள் முதலில் மலர்ந்து பின் உதிரும் வரை குவியாதிருத்தல் போல, முதல் நாள் உள்ளம் மகிழ்ந்து விரும்பியது போலவே முடிவு வரையில் மகிழ்ந்து விரும்பியிருப்பது நட்புடைமையாகும்.

- அப்படியின்றி தோண்டப்பட்ட குளத்திலே இருக்கும் பூவைப் போல முதலில் மலர்ச்சியைக் காட்டிப் பின்பு முகம் சுருங்கும் தன்மையுடையவரை விரும்புவாரும் இல்லை, நட்புச் செய்வாரும் இல்லை.

“நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை”.........

நல்ல நிலையிலே தன்னை நிறுத்திக் கொள்பவனும், அந்த நிலையைக் கெடுத்துத் தன்னை தாழ்ந்த நிலையில் சேர்க்கின்றவனும், இருக்கும் நிலையைவிட மிகவும் மேலான நிலையிலே தன்னை உயர்த்திக் கொள்பவனும், தன்னை தலைமையுடையவனாகச் செய்து கொள்பவனும் தானே ஆவான்.

## “ஒருநன்றி செய்தவர்க்கு ஒன்றி எழுந்த”........

தமக்கு ஒரு நன்மை செய்தவர் தொடர்ந்து நூறு குற்றங்கள் செய்தாலும் சான்றோர் பொறுத்துக் கொள்வர்.

ஆனால் கயவர்க்கு எழுநூறு நன்மைகளைச் செய்து தவறிப் போய் ஒன்று தீமையாய் நேர்ந்து விடினும், முன் செய்த எழுநூறு நன்மைகளும் தீமையாகவே ஆகிவிடும்.

# பழமொழி நானூறு

பழமொழி நானூறு அதன் சிறப்புப் பாயிரத்தையும், கடவுள் வணக்கத்தையும் சேர்த்து நாலடியால் அமைந்த நானூற்றொரு (401) பாடல்களைக் கொண்ட நீதிநூலாகும்.

சங்கம் மருவிய காலத் தமிழ் நூல் தொகுப்பான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இது முன்றுறையர் அல்லது முன்றுறை அரையனார் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது.

இதன் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒரு பழமொழி சார்ந்த நீதி கூறப்படுவதால் பழமொழி நானூறு என்ற பெயர் பெற்றுள்ளது.

இதில் கூறப்பட்டுள்ள பழ மொழிகள் இலக்கியம் சார்ந்தவையாகும்.

சங்க காலத்தினை பற்றி இந்நூல் அதிக தகவல்களைத் தருகின்றது.

இதன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு எனக் கருதப்படுகின்றது.

# பாம்பின் கால்
# "புலமிக் கவரைப் புலமை தெரிதல்"......................

நன்மை மிக்க அழகிய நீர்வளம் நிரம்பிய ஊரை உடையவனே! பாம்பின் கால்களை தம் இனமான பாம்பே அறியும்.

அது போன்று அறிவிற் சிறந்தவரை அறிவினால் அறிந்து கொள்ளுதல் அவர்களைப் போன்ற அறிவிற் சிறந்தவர்க்கே இயலும்.

எளிய அறிவு கொண்ட பொதுமக்களுக்கு அறிவுடையவரின் புலமையை அறிந்து கொள்ளல் இயலாது.

**"பாம்பறியும் பாம்பின் கால்"**

## அறிமடமும் ஓர் அழகே!

**“முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்”……….**

நெருக்கமான மடல்களுடைய அழகிய தாழைகள் பொருந்திய கடல் நாட்டவனே! காட்டில் படர்ந்திருந்த முல்லைக்குத் தேரையும், வாடைக் காற்றால் வாடிய மயிலுக்குப் போர்வையும் முன்னாளில் தந்தவர்களைக் கேள்வியாக அறிந்துள்ளோம்.

எனவே, ஆராய்ந்து சொல்லுமிடத்து, அறிமடமும் சான்றோர்க்கு அழகேயாகும் .

**“ அறிமடமும் சான்றோர்க்கு அணி”**

## சொன்னாலும் உணர்வு தோன்றாமை.

**“ பூத்தாலும் காயா மரமுள மூத்தாலும்”...........**

பூத்தலும் காய் காய்க்காத பாதிரி முதலான மரங்கள் உள்ளன வயதால் முதிர்ந்தாலும் நல்ல நூல்களை அறியாதவர் தாம் மிகுதியாய் இருக்கின்றனர்.

வரப்பு கட்டி நீர் பாய்ச்சிய பாத்தியில் விதையை விதைத்தாலும் முளைக்காத விதைகள் உண்டு.

அவைபோல் அறிவற்றவனுக்கு அறிவுரைகளைச் சொன்னாலும் உண்மை உணர்வு அவனுக்குத் தோன்றாது.

“ பேதைக்கு உரைத்தாலும் தோன்றாது உணர்வு”

**அமைச்சர்களின் சொற்பயன்**

**“செயல்வேண்டா நல்லன செய்விக்கும் தீய”.............**

அறிவினால் முதிர்ந்த அமைச்சர் கூறும் சொற்கள் செய்வதற்கு முடியாத நல்ல செயல்களைச் செய்விக்கும்.

மன்னன் தீயவற்றைச் செய்ய முனைந்து நின்றால் இடையில் நின்று தடுக்கும்.

மாறுபாடுடைய மன்னனை வலியுறுத்தி அவனுக்கு உறுதியைக் கூறுவதால் முன்னால் துன்பம் அளிப்பதாக இருக்கும். பின்னால் இன்பம் அளிக்கும்.

**“முன் இன்ன மூத்தார் வாய்ச் சொல்”**

**நன்றி மறக்கக் கூடாது**
**“ நாடி நமரென்று நன்கு பரந்தாரைக்”**

விளங்கும் மணிகள் பொருந்திய பெரிய கற்பாறைகளுடைய மலைநாடனே! நம்மவர் என்று எண்ணி வேண்டிய உதவிகளைச் செய்து நன்கு காப்பாற்றியவரைக் காப்பாற்றப்பட்டவர் அவர்க்குச் செய்யத்தக்க தீமையை அவருடைய பகைவருடன் கூடி ஆராய்பவர் தான் தங்கியுள்ள மரக்கிளையின் அடியை வெட்டி விடுவதைப் போன்றதாகும்.

**“ நினைப்பின்றித் தாமிருந்த கோடு குறைத்து விடல்”**